812

உ

பரதமாத்தா துணை.

இந்து தேசாபிமானிகள்பேரில்

# இன்பரச கீர்த்தனம்.

(இரண்டாம்பாகம்.)

812
1.72



வி எம். ஜிக்கிரியாசாயபு கேட்டுக்கொண்டபடியால்,

சூளை - மாணிக்கநாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

லைன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1922. [அணா 1.

ஜிஸ்டர் காபிரைட்.

உ

பாரதமாத்தா துணை.

இந்து தேசாபிமானிகள் பேரில்

# இன்பரச கீர்த்தனம்.

## இரண்டாம்பாகம்.

### விநாயகர்துதி வெண்பா.

தேசாபிமானிகள்மேற் திவ்யகீதம்பாட
ஆசாரின் சீடனிட மன்பாக—பேசாயோ
முந்தி யுனைபணிந்தேன் முக்கணனார் தன்மகனே
தொந்திநீ வந்திடுவாய் துணை.

---

### பரமாத்தா ஸ்துதி.

மாரன் வாதையினால் யென்ற மெட்டு

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாரத மாத்தாவே
பக்ஷமுடனெனைவந்து ரக்ஷி[illegible]நீவாழும்

அநுபல்லவி.

சுத்தபக்தருக்கு இத்தரையில் நித்தம்வந்து முத்திதரும் பார
பாதம் வேதம் கீதம் நீதம் வோதும் போதும் பார
பற்றகற்றி;நற்றிசுற்றி குற்றமற்று வெற்றிபெற்ற பார

சரணங்கள்.

1 சூரரிடம்சண்டை செய்யமுன் சென்றாயே
சூலாயுதம்கொண் டசுரரை வென்றாயே
கோரரூபமுடன் பாரில்நீ நின்றாயே
குமரனைவந்து [illegible]ரினே னென் தாயே

2 நாயகனோடு நடனம் புரிந்தாயே
நாணி சிவனிடம் தோர்வை யடைந்தாயே
மாயனவர்செய்த மர்ம மரிந்தாயே
மானிடர்கள்தின மகிழ்ந்து வரும்தாயே பார

3 மாமுனிவர்காந்தி மகிழ்ந்து துதித்தாரே
மானிலஞ்செழிக்க மனதில் நினைத்தாரே
தாமதஞ்செய்யாமல் வாவென் றழைத்தாரே
தாய்நீ க்ருபைசெய்வாய் ததும்பி யுரைத்தாரே பார

4 செந்தமிழினிற் சிறந்த சென்னைபூமி
செல்வர்கள்மகிழ்சிறு மணவூர் முனிசாமி
மைந்தன் மாணிக்கம்நல் மாணவராய்நேமி
மாதுநின்னருளினாற் லோதினேன் சிவகாமி பார

---

## ஸ்ரீமான் மகாத்மாகாந்தி துதி.

கணநாதா என்ற வர்னமெட்டு.

இ-ம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

காந்தியைகாண் ஜயகுண காந்தியைகாண்—தேடி

அநுபல்லவி.

கண்டவர்க்கு தொண்டுசெய்து மண்டலத்தில் காந்

சரணங்கள்.

1 புண்யசீலன் பெருந்
தன்மையான நன்மைபேசும் வுண்மைகுண காந்

2 குருவாக்யம் பெற்று
பெருமையோடு அருமையாக வருங்குரு காந்

3 துரைமார்கள் படுங்
குறையைநிதம் வுரையசெய்யும் ஹரிகுரு காந்

4 ஜீவகாருண்யன் ப்ரம்ம
தேவனென்றே ஆவல்கொண்டு ஓடிவந்து காந்

---

# ஸ்ரீமான் லோகமான்ய பால கெங்காதர திலகர் ஸ்துதி.

தியாகராயரே யென்ற, வர்னமெட்டு.

பல்லவி.

கெங்காதரத்திலகரே எங்கும்புகழ்பால
லோகமான்ய ஸ்ரீமான் பால — கெங்

அநுபல்லவி.

பாங்குடனேபெய ரோங்கசுராஜ்யம்
தீங்குகள்நேராமல் வாங்குவேனென்றுரைத்த — கெங்

சரணம்.

1 யேங்கி யிந்தியர் — தூங்கினவர் விழிக்க
யிறைவனே — யிவுலகம்செழிக்க
ஆங்கிலேயர்லண்டன் காங்ரெஸனும்சபையில்
தேங்கியுரைத்து அன்று பூங்கொடியுடனின்ற — கெங்

தங்கினயிடமதிற் சங்கமெனவேமுதற்
பொங்கிடசெய்தவோர் சிங்கம்நீதானே
மங்களங்கூரிடும் யெங்கள் சீமானே
மனமகிழ்ந்துவுனை தினம்பணிந்தேனே — கெங்

2 பா ருலகில்நீ — பாடுபட்டு நின்றாய்
பதிபெற — பரனிடஞ்சென்றாய்
வீரியமானநின் காரியம்ஜெயம்பெற
பாரினிலேவுரு மாறிவருகின்றீரோ — கெங்

சிரியன் மாணிக்கங்கவி வுரியவர்க்குமுதவி
பெரியவர்கட்குஞ்செவி பிரியப்படும்படி
அரியவிஷயங்களை தெரிவித்தேனிந்தமட்டும்
ஹரி அரன்கிருபையால் தரணியில்ஜெயங்கிட்டும் — கெங்

## ஸ்ரீமான் அலிசகோதரர்கள் ஸ்துதி.

அம்பிகா உன்மகன்குகன் என்ற வர்னமெட்டு.

பல்லவி.

அண்ணன் தம்பி யிருவராம்
மன்னர் மஹ மதியராம் அண்

அநுபல்லவி.

1 இன்னிலத்தை பார்க்க கும்பி
பெரிய யெழுந்தாரே வெம்பி
மண்ணிர் ஷீராவை நம்பி
மாதர் வேதம் ஓதும்தூதராம் அண்

2 சுதேசி சௌ கடலி
சகோதரர் மஹம டலி
மாதா அலி பேகம்கலி
மன்னர்புகழ இன்னகர்வந்தார் அண்

3 இந்துதேச மக்களுக்கு
இன்பமேயுண் டாக்குதற்கு
நொந்துவெகு நாடுதெற்கு
நோக்கியொற்றுமை யாக்கியகுருக்கள் அண்

4 சுயராஜ்யம் வேணுமென்றால்
குக்ஷமிது பாருமென்றார்
கைராட்னம் யெடுங்களென்றார்
கதருடைகளை முதலெடுத்துமென்றார் அண்

5 சீர்திருத்தஞ் செய்துக்கொண்டு
செல்வரிவர் வருககண்டு
பார்த்திருந்த கவர்ன்மெண்டு
பாலரை தவச் சாலையிலடைத்தார் அண்

6 பாலன்மாணிக்கம் சொன்ன
பாடலதை கேழ்க்கு மண்ணே
காலநெருங்காத முன்னே
கள்குடியா மல் திருத்தென்றார் அண்

# ஸ்ரீமான் லாலா லஜபதிராய் ஸ்துதி.

## தொட்டுதாலிகட்டின மன்னுயென்ற சாவித்திரி வர்னமெட்டு.

### லாவணி சந்தம்.

கண்ணிகள்.

1. லாலாலஜபதி ராயே ரிவர்
நாலாதிசைதெரிந்த நேயர் யெங்கள்
பாலாம்பிகைக்குமொரு சேயர்
பணிந்துநின்று பாயர்
பதமுணர்ந்த ஞாயர் அவர்
பகர்ந்தமொழி தள்ளுவோர் தீயர் யெங்கள் லா

2. பாஞ்சாலநகரதிர் பிறந்தார் தன்
பலத்தவக்கீல்தொழிலே மறந்தார் சற்றும்
அஞ்சாநெஞ்சம்படைத்து நடந்தார்
அதிகசின மடைந்தார்
அரசர்பயந் துறந்தார் சுய
ஆக்ஷிபெரமனதில் நினைந்தார் யெங்கள் லா

3. சுதந்தரமென்னும்விதை நாட்டி எங்கும்
சூழசுதேசிசபை கூட்டி நாம்
பதம்பெரும்பொருளதை காட்டி
பயங்கரத்தை யோட்டி
பக்ஷமாய்கல்வி யூட்டி இந்த
பாரில்தருகின்றாரே பேட்டி யெங்கள் லா

4. பாலன் சூளை மாணிக்கம் பாட்டு அன்பர்
பாடசெவியிலிதை கேட்டு [illegible]
காலனவன்பயத்தை யோட்டு
கதருடையை மாட்டு
கவிஞருடன் கூட்டு நாம்
கடைதேரவேயிதுவோர் நோட்டு யெங்கள் லா

---

# ஸ்ரீமான் மிஸ்டர் வாடியா ஸ்துதி.

காந்தி மஹான்போதுண்டோ என்றவர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-ஏகதாளம்.

பல்லவி.

வாடியா துரைபோலுண்டோ-ஜய வாடி

அநுபல்லவி.

வாதுதினமே வைகையேற்றுங்குணமே வந்தார் முன்னமே வாடி

சரணங்கள்.

1. ஆடியபாதன் அருளிற்குபேரன்
அவர்படித்த வேதம் நற்கீதம் பொற்பாதம் ப்ரசாதம்
அறஞ் செய்யமனதை நாட்டி
அன்பர் பேரைகொடியில் காட்டி
ஆகும்வழியில் பஜனை போகும்படியே செய்திட
வந்தார் ஷக்கன் தந்தார் மனநொந்தார் சீட்டில்குந்தார்-ஜய வாடி

2. ஜீவகாருண்யன் தேவலாவண்யன்
சினத்தைவிட்டமாரன் மஹாசூரன் மனதீரன் குபேரன்
சில தேசமுழுதுஞ் சென்று
சொந்த கவிக ளுரைப்பார் நின்று
சேறுந்துகை ஆரில்முதல் பேரின்பமாய் பேசி பலன்
காட்டி மனதுட்டி அவர்பேட்டி மொத்தங்கோட்டி-ஜய வாடி

3. சத்வகுணமாஸ்தி கம்பளமுஞ்சாஸ்தி
சர்வமயமும்வாழ்த்ததுயர்தீர்த்த புகழேத்தநம்மைகார்த்த
ஸ்ரீமான் வாடியாவைக் கண்டு
கோமான்கள் செய்வார் தொண்டு
சோமன் ரகுறுமன் பரந்தாமன் குணவான் கண்டிட
வெங்குந் திரைசங்கம் பெயர் பொங்கு மவர் சங்கும்-ஜய வாடி

4. மாணிக்கவாசன் மதுரகவிநேசன்
மஹாவிரத சாது புவிமீது கவியோது நிதிராது
பொற்பாதம்நம்பிடு மோக்ஷம்
புத்தி கூர்மவிம்ப கடாக்ஷம்
மாலென்றே துதிசெய்திட காலன்கண்டே ஓடிட
மந்த்ரன் வெகுதந்த்ரன் குணசுந்த்ரன் தேவஇந்த்ரன்-ஜய வாடி

---

## ஸ்ரீமான் சீயார்தாஸ் ஸ்துதி.

அமாரநபியென்ற இந்துஸ்தான்மெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சீயார்தாஸவர்செய்தது பாரிஸ்டர் பாசு

அநுபல்லவி.

நேயர் மகாத்மாசொற்கள் ஞாயமெனவறிந்து
மாயனவனருளோ மயங்கிதொழிலைவிட்டார் சீ

தொகையறா.

பரதநாட்டுத்திலகர் பண்டுக்குபக்ஷமாய்
பவுன்மெத்த தந்த நேசி
பார்பரத மக்களும் பதிபெற்று வீடேற
பண்ணினா ரிவர்சுதேசி

**பாட்டு.**

பாம்பைதவச்சாலையிற் பட்டபெயரும்பெற்றார்
பாலன் சூளைமாணிக்கம் பாடி புகழலுற்றார்

---

# ஸ்ரீமான் பால கெங்காதர திலகர் இறந்ததைப்பற்றி இந்து ஜனங்கள் புலம்பும் கீர்த்தனம்.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ரூபகம்.

வீணை என்படைத்தாய் என்றவர்னமெட்டு.

பல்லவி.

தெய்வமேதிவ்ய திலகரை என்மடித்தாய் தினம்
திரிவார்பெரி குருவாய்வூரில் வருவார்பொருள் தருவார்திவ்ய தி

அநுபல்லவி.

மெய்யனவர்வார்த்தை மேதினியிற்பேசி
மெதுவாயவர் கதையோதியே பதராமலே மதம்நீக்கிய தில

சரணம்.

1 சென்னைராயவேலூர் சிட்டி.பெங்ளூர் தண்டு
சொன்னேன் ஜப்பான் ஜர்மன் அமெரிக்காவைகண்டு
புண்ணியன்பெல்ஜியம் லண்டன் முதற்கொண்டு
போதுங்குணவாதுந்துரை சூதுந்தினம் ஓதும்திவ்ய தில

2. கைப்பொருளாசை கருத்திலும்நினையார்
மெய்ப்பொருளேவுனை வேண்டாமல்துணையார்
யெப்போதுமேழையை இன்பமாய்பணிவார்
இடரானது துடராமலே மடமானிடமனதூரிய தில

சிறுமணவூர்முனி சாமிசீடன்சூளை
பொருமையாய்மாணிக்கம் பாடியதோர்நூலை
அருமையாய்வாசித்து அந்திசந்திவேளை
அன்பாய்ப்பு[illegible]பாய்முதல்தெம்பாய்துதிகும்பாய்நிதம்தில

இரண்டாம்பாகம்-முற்றிற்று.

---

இப்புத்தகம் வேண்டியவர்கள் சூளை-மாணிக்க நாயகர்,
வெற்றிலைப்பாக்குக் கடை, நெ. 2, சூளை ஐரோட், மதராஸ்.
மூன்றாம்பாகம் கூடியசீக்கிரம் வெளிவரும்.

# பட்டணம் சர்தாரணப் பொடி.

தென் இந்தியா முழுதும் பிரக்கியாதிபெற்று அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற எமது இந்திய மூக்குத்தூளானது மிக நேர்த்தியாயும் மணமாயும் காரமாயும் அரைப்பு சுத்தமாயும் கையிலெடுக்கும்போதே உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியது. ஞாபக சக்தியைத் தரும். இத்தூளை ஒருதரம் வரவழைத்து உபயோகித்துப் பாருங்கள். இதை தேவையானபோது சப்ளை செய்யப்படும். இதை ஒருமாதம் வரை சீசாவில் வைத்துப் போட்டுக்கொள்ளலாம் கெட்டுப்போகாது. இதன் அருமையை ஒருதடவை வாங்கி உபயோகித்துப் பார்த்தால் நண்பர்களுக்கு இனிது விளங்கும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீசை 1-க்கு ரூபா | 3 | 8 | 0 | — | வி. பி. சார்ஜ் | 0 | 14 | 0 |
| அரைவீசை | 1 | 12 | 0 | — | ,, | 0 | 8 | 0 |
| கால் வீசை | 0 | 14 | 0 | — | ,, | 0 | 5 | 0 |
| சேர் 1-க்கு | 0 | 12 | 0 | — | ,, | 0 | 5 | 0 |
| அரைசேர் | 0 | 6 | 0 | — | ,, | 0 | 4 | 0 |

மக்குவாய் கொட்டை 1-க்கு அணா 1. டஜன் 1-க்கு விலை அணா 10.

## நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட

# பரிமள சுகந்த மூக்குத்தூள்.

இந்தப் பெயர்பெற்ற உயர்ந்த சுகந்த மூக்குத்தூளானது வெகு பெயர்களால் வாங்கி உபயோகித்து ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கின்றன.

இந்த மேலான பெருமைதங்கிய தூளினால்

தீரும் வியாதிகளாவன.

ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத் தலைநோய், மண்டைக்குத்தல், கண்களிலுண்டான எல்லா வியாதிகளையும் தீர்ப்பதுடன் கண்டத்திற்கு மேற்பட்ட 96-வியாதிகளையும் மூளையைச் சார்ந்த வியாதிகள் எல்லாவற்றையும் சொஸ்தப்படுத்தி வைக்கும். எந்த மூக்குத்தூளும் இத்தனை பிரபல்யமுடைத்தாயும் மேற்கூறிய வியாதிகளைக் கண்டிக்கக் கூடியதாயும் எவ்விடத்திலும் கிடைக்காது. எங்களால் செய்யப்படுகிற இந்தத் தூளானது சாதாரண புகையிலைத்தூளை 10-15-தடவை உபயோகப்படுத்துபவர் இந்தப் பரிமள சுகந்த மூக்குத்தூளை 2-தடவை உபயோகிப்பதனால் 15-தடவைகள் உபயோகித்ததற்கு மேலாகக் காணப்படும் மூன்று பைசா சாதாரண புகையிலைத் தூளுடன் இந்தப் பரிமள மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்துக் கலந்தால் எல்லாம் மேற்படி சுகந்த முண்டாய்விடும். இதை அநேக பிரபுக்கள் தாங்கள் வீடுகளில் குடும்ப ஔஷதமாய் வைத்து உபயோகித்து வருகிறார்கள். இந்தத் தூளானது சாதாரணத் தூளைப்போல் இரண்டொரு தினங்களில் சுபாவகுணமாகிய வாசனை, காரம் முதலியவைகளை விட்டுவிடாது. எக்காலமும் அதன் காரமும் வாசனையும் தன்னைவிட்டகலாதபடி காத்துக்கொண்டேயிருக்கும். இதை உபயோகிப்பதில் யாதொரு கெடுதியும் சம்பவியாது.

புட்டி 1-க்கு விலை அணா 0 4 0 12 புட்டிகள் விலை 2 9 0

---

எமது விலாசம்—எஸ்-டி-மாணிக்கநாயகர்,

ராமலிங்கம் அண்டு கம்பெனி,

நெ-2. சூளை பஜார் ரோட்.